6.3 **புள்ளிவிபர பட்டியல்**

| இல. | புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும் பிரதான முறை | எதிர்பார்க்கப்படும் வேறு முறைகள் | பெற்றுக் கொடுக்கப் படும் புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமைகள் | அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகத்தினால் ஏதேனும் ஓர் துறையில் பெற்றுக்கொண்ட பட்டம் | 20 | 20 |
| 2. | தொழிற் தகைமை | சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற் சான்றிதழ்கள் | 20 | 20 |
| | | சம்பந்தப்பட்ட துறையில் 06 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான தொழிற் சான்றிதழ்கள் | 10 | |
| 3. | அனுபவ அறிவு | 1 ஆம் தரத்தில் 05 வருடங்களுக்கு அதிகமாக (வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் கூடிய 05 வருடங்களுக்கு) | 15 | 30 |
| | | வேறு தரத்தில் 20 வருடங்களுக்கு அதிகமாக (வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம் கூடிய 05 வருடங்களுக்கு) | 10 | |
| | | பரிசோதகர் தரத்தில் சேவையில் ஈடுபட்டிருத்தல் (கிளை பிரதானி அல்லது அதற்கு அடுத்ததான பதவி களில்) வருடத்திற்கு 01 புள்ளி வீதம் | 05 | |
| 4. | ஆங்கில மொழி அறிவு | ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா - (06) ஆறு மாதங்களுக்கு அதிகமாக | 10 | 15 |
| | | ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பாடநெறி - 03 மாதம் தொடக்கம் 06 மாதங்கள் வரை | 05 | |
| 5. | கணினி அறிவு | ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா - (06) ஆறு மாதங்களுக்கு அதிகமாக | 06 | 10 |
| | | ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பாடநெறி - 03 மாதம் தொடக்கம் 06 மாதங்கள் வரையிலான | 04 | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் முன்வைக்கப்படும் திறமைகள் | தலைமைத்துவம் | 02 | 05 |
| | | ஆளுமை | 02 | |
| | | தொடர்பாடல் திறமை | 01 | |

**கவனிக்கவும்**.- நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளையும் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது.

07. **பரீட்சைக் கட்டணம்**.-

பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்கள ஆணையாளரின் வரவு இல. 20-03-02-13 அதனடிப்படையில் அரசாங்க

பரீட்சை எழுதல் வேண்டும். அவ்வாறு இருக்க முடியாது என மறுத்தால் பரீட்சை எழுதப்படுவது தடை செய்யப்படாது. இருப்பினும் அவரது பெறுபேறு வெளியிடப்பட மாட்டாது.

11. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.-

(i) விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை பெற்றுத்தர வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைக்கமைய யாதேனும் விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ii) விண்ணப்பதாரியினால் பெற்றுத் தரப்படும் தகவல்கள் எதிர்காலத்தில் பிழையானது என கருதினால் அவர் தெரிந்தோ தெரியாமலோ கருத்து மறைத்து வைத்தால் என்றாவது ஒரு நாள் தெரிய வந்தால் அல்லது அவர் நியமனத்தை பெற்றுத்தருவது தொடர்பாக மேலும் ஆலோசனை செய்யப்படுவதுடன் இப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட நியமனத்தை இரத்து செய்வதுடன் அரசாங்க சேவையில் இருந்தும் நீக்கப்படுவீர்.

12. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்**.-

12.1 **பரீட்சை மொழி ஊடகம்**

12.1.1 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

***குறிப்பு***.- (1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரி அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

12.2 **பரீட்சைப் பெறுபேறுகள்**

(i) இப்பரீட்சையின் முடிவுகள் அரசாங்க ஆணைக்குழுவின் செயலாளருக்கு வெளியிடுவதற்கு நடைமுறைப்படுத்துவதுடன் பின்னர் எழுத்துப் பரீட்சையில் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கு பெறுபேறு தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது www.result.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

12.3 **பரீட்சைப் பாடத்திட்டம்**

12.3 (i) எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்

I. தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை விதிகள்

II ஆம் பாடத்தில் இருந்து XXXVI ஆம் பாடம் வரை உள்ள விடயம் தொடர்பாக பரிசீலனை செய்தல்.

II. நிதி முறைமைகள்

(a) I ஆம் பாடம்

வருடாந்த மதிப்பீடு
வருடாந்த மதிப்பீட்டை ஒழுங்குபடுத்தல், முன்வைத்தல் மற்றும் சமப்படுத்தல்

(b) II ஆம் பாடம்

செலவு செய்தல் தொடர்பாக அதிகாரத்தை வழங்குதல், அனுமதி அழித்தல், சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல்.

(c) III ஆம் பாடம்

அரச கணக்கீட்டு முறை, கணக்காளர் கடமைகள் மற்றும் விடயங்கள், கருவூலத்தின் கடமைகள்

(d) VI ஆம் பாடம்

முற்பணம்

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு (SLIATE) மாணவர்களைச் சேர்த்தல்

## 2022/2023 ஆம் கல்வி ஆண்டு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு (SLIATE) 2022/2023 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இயைபாக 2023, மே 26 ஆந் திகதி பிரசுரமான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2023, மே 28 ஆந் திகதி பிரசுரமான சிலுமின, தி. வாரமஞ்சரி மற்றும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகை விளம்பரம் சம்பந்தமானது.

மேற்படி வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிக்குப் புறம்பாக நாவலப்பிட்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பின்வரும் கற்கைநெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

| இல. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் | கற்கை நெறி |
|---|---|---|
| 01 | **நாவலப்பிட்டி**<br>தொலைபேசி இல. : 054-2050634<br>**முகவரி** :<br>(இல. 154/ 6, கம்பொல வீதி, (பின் ஸ்ட்ரீட்), ஐஸ்வர்யா மண்டபம், 4 ஆம் மாடி, நாவலப்பிட்டி) | HND in English (Full Time)<br><br>HND in Information Technology (Full Time) |

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி 2023, யூலை 04 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை உயர் தொழில்நுட்பவியில் கல்வி நிறுவனத்தின் (SLIATE) - www.sliate.ac.lk அல்லது apply.sliate.ac.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பவியல்
கல்வி நிறுவனம் (SLIATE).

06-528

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.